பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

14 10 2026 WEDNESDAY 7 15 PM ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- தேசிய சமூக நிதியுதவி திட்டத்தை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- மக்களின் நம்பிக்கையை பெற்ற கட்சியாக பிஜேபி திகழ்கிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

- நீர் ஆதாரங்களை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாநில அரசுகளை, மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

- கனடாவுடனான பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பு வலுவடைந்து வருவதாக இந்தியா கூறியுள்ளது.

- உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanvi Patri காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>>><<<<<<<<

தேசிய சமூக நிதியுதவி திட்டத்தை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இதன் மூலம் 3 கோடியே 20 லட்சம் பயனாளிகள் பயன்பெறுவார்கள் என்று கூறினார்.

IDBI வங்கியை சீரமைப்பதற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

சிறு குறு தொழில்துறை வளர்ச்சியில் இந்த வங்கி முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் கூறினார்.

சீரமைக்கப்படும் IDBI வங்கியின் 34 சதவீத பங்கினை மத்திய அரசும், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகமும் வைத்திருக்கும் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<

மக்களின் நம்பிக்கையை பெற்ற கட்சியாக பிஜேபி திகழ்கிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், குஜராத் மாநில உள்ளாட்சித் தேர்தலில் பிஜேபிக்கு கிடைத்துள்ள வெற்றி இதனை உணர்த்துவதாக கூறியுள்ளார்.

எதிர்க்கட்சிகளை மக்கள் புறக்கணித்துள்ளதாகவும், இதன் காரணமாக அவர்கள் தேவையற்ற போராட்டங்களை நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறந்த நிர்வாகத்தை வழங்க வேண்டும் என்பதை தாரக மந்திரமாக கொண்டு பிஜேபி அரசுகள் செயல்பட்டு வருவதாகவும் திரு. அமித் ஷா கூறினார்.

>>>>>>>><<<<<<<<

கனடாவுடனான பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பு வலுவடைந்து வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

அரமுறைப் பயணமாக புதுதில்லி வந்துள்ள கனடா வெளியுறவு அமைச்சர் திருமதி. *Anita Anand*-துடன் நடத்திய பேச்சுகளுக்குப் பின்னர் சமூகவலைதளத்தில் டாக்டர் ஜெய்சங்கர் இவ்வாறு கூறியுள்ளார்.

முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச பிரச்சினைகள் குறித்து கனடா அமைச்சருடன் விரிவாக பேச்சு நடத்தியதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

கனடாவுடன் தொழில்துறையிலும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாக டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<<

நீர் ஆதாரங்களை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய குடிநீர் வழங்கல்துறை செயலர் திரு. *Ashok Meena* கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று புதுதில்லியில் இதுதொடர்பாக, மாநில அரசுகள் பங்கேற்ற மாநாட்டில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கத்தின் கீழ், நீர் ஆதாரங்களை பாதுகாப்பதற்கான திட்டங்களை செயல்படுத்துமாறு அவர் வலியுறுத்தினார்.

குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தை மாநில அரசுகள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று திரு. *Ashok Meena* கேட்டுக் கொண்டார்.

>>>>>>>><<<<<<<<

கர்நாடக மாநில முதலமைச்சர் திரு. டி.கே. சிவக்குமார், மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷியை இன்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

கர்நாடகாவில் கரும்பு விவசாயிகள் எதிர்கொண்டுள்ள பிரச்சினை குறித்து இந்த சந்திப்பின் போது விவாதிக்கப்பட்டதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>>>><<<<<<<<

மஹாராஷ்ட்ராவில் வறட்சி பாதித்த பகுதிகளாக 40 தாலுகாக்கள் கூடுதலாக அறிவிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் கூறியுள்ளார்.

இன்று மும்பையில் தமது தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மாநிலத்தில் உள்ள 358 தாலுகாக்களில் 305, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இப்பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு முதற்கட்டமாக ஐந்தாயிரம் ரூபாய் அவர்களது வங்கிக் கணக்கில் தீபாவளிக்கு முன் செலுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

மராத்வாடா பகுதியில் நிலத்தடி நீர் வெகுவாக குறைந்துள்ளதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<

மக்கள் நலனே தேசத்தின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு செயல்பட்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, 25 ஆண்டுகள் பொதுசேவையை நிறைவு செய்துள்ள நிலையில், அவரது தொலைநோக்குப் பார்வையின் கீழ், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

நீடித்த வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டை உறுதி செய்யும் வகையில் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள், மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

இதுதொடர்பான சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது பிரதமர் அருங்காட்சியகம்.

( Voice Over - 55 Sec.)

( 2022ஆம் ஆண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி இந்த அருங்காட்சியகத்தை திறந்து வைத்தார். நாட்டின் வளர்ச்சிக்காக பிரதமர்கள் அளித்த பங்களிப்பை எடுத்துரைக்கும் வகையில் இந்த அருங்காட்சியகம் உருவாக்கப்பட்டுள்ளது. நமது ஜனநாயகத்தின் உயரிய

மாண்புகளுக்கு எடுத்துக்காட்டாக பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் நாட்டின் வளர்ச்சிக்கு அளித்த பங்களிப்பிற்கான அம்சங்கள் இந்த அருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ளன. இரண்டு கட்டிடங்களைக் கொண்ட இந்த அருங்காட்சியகம் நவீன டிஜிட்டல் தொழில்நுட்ப வசதிகளையும் கொண்டுள்ளது. நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட பெண் தலைவர்களை நினைவுகூரும் வகையிலான ஒளி - ஒலி காட்சியும் இந்த அருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ளது. நமது பாரம்பரியத்திற்கு எடுத்துக்காட்டாகவும், நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபட்ட அரசுகளை போற்றும் வகையிலும் இந்த அருங்காட்சியகம் திகழ்கிறது. )

>>>>>>>><<<<<<<<

கேரளத்தில் மாநில கடல்சார் வாரியத்தை மாற்றியமைக்க அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கு வகை செய்யும் மசோதாவை அம்மாநில சட்டப்பேரவையில் முதலமைச்சர் திரு. வி.டி. சதீசன் இன்று தாக்கல் செய்தார்.

கடல்சார் நில வங்கியை ஏற்படுத்துவதற்கு இந்த மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<

மாணவர்களை நல்வழிப் படுத்துவதில் ஆசிரியர்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக திரிபுரா முதலமைச்சர் டாக்டர் Manik Saha கூறியுள்ளார்.

இன்று அகர்தலாவில் 23 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு அரசுப் பணிக்கான நியமன ஆணைகளை வழங்கி அவர் பேசினார்.

அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளிப்படைத்தன்மையுடன் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

ஆசிரியர் பணிக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தற்போதைய சூழலுக்கு ஏற்றவாறு தங்கள் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் டாக்டர் Manik Saha வலியுறுத்தினார்.

>>>>>>>><<<<<<<<

மேற்குவங்கத்தில் தீபாவளிக்கு முன்னர், புதிய தொழில் கொள்கை வெளியிடப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. சுவேந்து அதிகாரி கூறியுள்ளார்.

Haldia-வில் நிகழ்ச்சில் ஒன்றில் பேசிய அவர், நிலம் கையப்படுத்துவது மற்றும் ஊக்கத்தொகை வழங்குவதற்கான பணிகளில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய இந்த கொள்கை உதவிடும் என்று தெரிவித்தார்.

தொழில்துறையின் வளர்ச்சியில் முந்தைய திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் இடதுசாரி கூட்டணி அரசுகள் கவனம் செலுத்தவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

முதலீட்டிற்கு உகந்த மாநிலமாக மேற்குவங்கத்தை உருவாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் திரு. சுவேந்து அதிகாரி தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<

உத்தரபிரதேச வளர்ச்சிக்கு முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் உத்வேகம் அளித்துள்ளதாக முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் கூறியுள்ளார்.

இன்று லக்னோவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சிறந்த நிர்வாகத்தையும் திரு. யோகி ஆதித்யநாத் வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

இதுவரை இல்லாத அளவிற்கு மாநிலத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு. ராம்நாத் கோவிந்த் கூறினார்.

>>>>>>>><<<<<<<<

உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanvi Patri காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 19 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் மூன்றாவது சுற்று ஆட்டத்தில் அவர், 15-9, 15-9 என்ற செட்கணக்கில் கொரியாவின் Han Bi Kim-ஐ வென்றார்.

>>>>>>>><<<<<<<<

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Aryaveer Dewan வெள்ளிப்பதக்கம் வென்றார்.

*ஆடவர் 19 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*>>>>>>>><<<<<<<<*

*19 வயதுக்குட்பட்டோருக்கான உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டி Montenegro-வின் Budva-வில் இன்று தொடங்குகிறது.*

*இந்தியாவின் சார்பில் Krisha Verma, Parthavi Grewal, Vanshika Goswamy, Hemant Sangwan, Rishi Singh உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.*

*>>>>>>>><<<<<<<<*

*இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் இடையேயான நான்காவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி ஹைதராபாதில் சற்றுமுன் தொடங்கியது.*

*இதில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்ததை அடுத்து, வெஸ்ட் இண்டீஸ் பேட் செய்து வருகிறது.*

*>>>>>>>><<<<<<<<*

*டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் Ishan Kishan முதலிடத்திலும், அபிஷேக் சர்மா 2வது இடத்திலும் நீடிக்கின்றனர். ஸ்ரேயஸ் ஐயர் 4வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>>>>><<<<<<<<*

*சோலாப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Dhakshineswar Suresh காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>>>>><<<<<<<<*

*உலக டிராக் சைக்கிள் சாம்பியன் போட்டி, Shangai-ல் இன்று தொடங்கியது.*

*இந்தியாவின் சார்பில் David Beckham, Ronaldo Singh, Laitonjam, Esowalben மற்றும் Yanglem Rojit Singh இதில் பங்கேற்றுள்ளனர்.*

*>>>>>>>><<<<<<<<*

*ஜெய்ப்பூரில் நடைபெற்ற தமிழக - ராஜஸ்தான் அணிகளுக்கு இடையேயான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டி டிராவில் முடிவடைந்தது.*

*>>>>>>>>END<<<<<<<<*